1972 ஆகஸ்ட் 18]

விலங்கு காட்சி சாலை

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகராட்சி எல்லைக்குள்ளோ அதன் அண்மையிலோ விலங்கு காட்சி சாலை ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசின் பரிசிலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Intensive Family Planning Programme

* 41 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. tne Minister for Public Health be pleased to state—

(a) the total number of males and females who underwent operation so far under Intensive Family Planning Programme in Tamil Nadu; and

(b) the district which stands first under this programme?

தீவிர குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

திரு. பி. திருஞானசம்பந்தம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் தீவிர குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் எத்தனை (1) ஆண்கள், (2) பெண்கள், இந்நாள் வரை அறுவை சிகிச்சை செய்து கொண்டனர்?

(இ) இதில் எந்த மாவட்டம் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது?

[1972 ஆகஸ்ட் 18

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தமிழ் நாட்டில் தீவிரக் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 21—3—1972 வரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆண், பெண்களின் எண்ணிக்கை வருமாறு:—

ஆண்கள்	1,80,977
பெண்கள்	20,762

(இ) அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆண்களின் எண்ணிக்கையில் தென்னாற்காடு மாவட்டமும், அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண்களின் எண்ணிக்கையில் மதுரை மாவட்டமும் முதலிடம் வகிக்கின்றன.

THIRU G. VASANTHA PAI: In view of the recent decision of the High Court which has been published in yesterday's newspeper warning the Government of the evil consequences of performing vasectomy on males, will the Government reconsider the Family Planning Programme in the light of the judgment?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, judgments are given in so many backgrounds. It cannot completely deny the right of the individual to have the benefit of the Family Planning Programme. This is something in the national interest that the State Government are doing.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு காரணமாக பார்லிமெண்டில் சில ஸ்தானங்களை இழந்து விடுகிறோம். அதைக் காப்பாற்றிக்கொள்ள குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பிரசாரம் என்ற வகையில் மட்டும் நடத்த அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழக அரசு இதிலே ஏமாறுவதற்கு இசையாது. இதன் காரணமாக பார்லிமெண்டில் எந்த அளவுக்கு நமக்கு இடங்கள் குறைக்கப் படுகின்றனவோ, அந்த அளவுக்கு ஈடு செய்வதற்கான ஒரு கொள்கையை வகுக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அதை ஏற்றுக் கொள்வது தமிழ் நாட்டில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் குடும்ப நலத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும், எல்லா

சமுதாயமும் ஏற்றுக் கொள்வதற்கும், முஸ்லிம் லீக் தலைவர் அவர்களும் ஒத்துக்கொள்வதற்கும் உதவுமாதலால் நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக இதைப்பற்றிச் சொல்லிக் கொண்டே வருகிறோம். ஆனால் இது வரையில் எந்த முடிவும் தெரியவில்லை. அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தால் ஏற்படுகிற விளைவுகளைப் பற்றி முன் கூட்டியே சொல்ல முடியாது. வேறு பல சூழ்நிலைகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சேர்த்துப் பரிசிலிக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைக்காக ஒரு ஆசிரியர் ஒரு நபரை அழைத்துச் சென்று அதில் ஏற்பட்ட கோளாறின் விளைவாக அவர் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அவருக்கு 'பைன்' விதிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு இம்மாதிரியான பரிதாப நிலைமை ஏற்படுகிறது. அந்த 'பைன்' தொகையை அரசு செலுத்துவதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் படித்தவர்கள், தங்களுடைய கடமையை பொறுப்புணர்ச்சியோடு செய்வார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சில படித்தவர்களும் தவறுகள் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அந்தத் தவறின் பலனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

THIRU A.R. DAMODARAN : Sir, financially speaking, is it more advantageous for us to have hundred thousand babies less or two M.Ps. more ? (Laughter).

THE HON. THIRU K. ANBAZHAGAN : My view is this. It is better to have less children in each family than to have more M.Ps.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு ஆசிரியர்கள் ஆளாக்கப்படுகின்ற காரணத்தால், அவர்களுக்கு இம்மாதிரியான தொல்லைகள்

ஏற்படுகின்றன. ஆகையினால் அரசு அந்த 'பைன்' தொகையைக் கட்ட முன் வரவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் இரண்டு தவறுகளைச் செய்கிறார்கள். எந்த ஆசிரியரையும் இந்த அரசு கட்டாயப்படுத்தவில்லை. இதை உறுதிப்படுத்திச் சொல்கிறேன். இரண்டாவதாக, ஆசிரியர்கள் படித்தவர்கள், மக்களிடையே நல்ல முறையில் எடுத்துச் சொல்வதற்குத் தகுதி உடையவர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தவறு எந்த முறையில் ஏற்பட்டது என்று பார்க்க வேண்டும். எந்த வகையில் அந்தத் தவறு ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து, அந்தத் தவறு ஆசிரியர் மேல் இல்லாமலிருந்தால், அதற்கான பரிகாரத்தை அரசு செய்யும்.

Professor in Gynaecology and Obstetrics

* 42 Q—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the post of Professor in Gynaecology and Obstetrics is kept unfilled for the past one year in the Thanjavur Medical College; and

(*b*) if so, the reason therefor?

மகளிர் நோய், மகப்பேறு இயல் பேராசிரியர் பதவி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில், மகளிர் நோய், மகப்பேறு இயல் பேராசிரியர் பதவி கடந்த ஓராண்டுக் காலமாக நிரப்பப்படாமலிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஒரு பதவி 21—1—70 முதல் 18—4—72 வரை காலியாக இருந்தது.